சுருக்கம்

விடுமுறை – 14.01.2019 அன்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் உள்ளூர் விடுமுறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (பல்வகை)த் துறை

அரசாணை (1டி) எண். 11

நாள்: 08.01.2019
விளம்பி, மார்கழி –24
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.154, பொது(பல்வகை)த் துறை நாள் 03.09.2009.
2. அரசு கடித எண்.8585/பல்வகை/2013–7, பொது (பல்வகை)த் துறை, நாள் 21.02.2014.
3. அரசாணை (நிலை) எண்.122, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (அ.வி3)த் துறை, நாள் 28.12.2016.
4. பல்வேறு தரப்பட்ட சங்கங்கள் / மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள்.

******

ஆணை:-

பார்வை நான்கில் படிக்கப்பட்ட பல்வேறு தரப்பட்ட சங்கங்கள் / மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளில் பொங்கல் பண்டிகை 15.01.2019 முதல் 17.01.2019 வரை கொண்டாடப்படவுள்ளதால், அனைவரும் தத்தம் குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் சொந்த ஊருக்குச் சென்று பொங்கல் பண்டிகை கொண்டாடுவதற்கு ஏதுவாக 14.01.2019 திங்கட்கிழமை அன்று, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் 14.01.2019 அன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

2. பல்வேறு தரப்பட்ட சங்கங்கள் / மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து, 14.01.2019 திங்கட் கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள மாநில அரசு அலுவலகங்களுக்கும் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளித்து, அவ்விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் 09.02.2019 சனிக்கிழமையன்று பணி நாளாக அறிவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

3. மேற்கண்ட உள்ளூர் விடுமுறை தினமானது செலாவணி முறிச்சட்டம் 1881 (Under Negotiable Instruments Act, 1881)-ன் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கருவூலம், சார்நிலைக் கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்பட தகுந்த ஏற்பாடு செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)